# தமிழ்நாடு போக்குவரத்து

**போக்குவரத்து :**

- ✓ போக்குவரத்து என்ற சொல் ஆட்களும், பொருட்களும் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகர்வதைக் குறிப்பதாகும். இப்போக்குவரத்துத் துறை பல்வேறு அம்சங்களைத் தன்னுள் கொண்டுள்ளது.

- ✓ தமிழ்நாட்டில் மிகவும் வளர்ச்சி பெற்ற, அடர்த்தியான, நவீன போக்குவரத்துக் கட்டமைப்புகள் அமைந்துள்ளது. பொதுத்துறை மற்றும் தனியார்துறை போக்குவரத்து அமைப்புகள் அந்தந்த மாநிலத்தின் தேவைகளை நிறைவு செய்கின்றன.

- ✓ தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக்கழகம் **(Tamilnadu State Transport Corporation - TNSTC)** தமிழக அரசின் போக்குவரத்துத்துறையின் கீழ் இயங்கும் பேருந்துகள் முக்கியமாக பொதுமக்கள் போக்குவரத்துக்காக உருவாக்கப்பட்ட துறையாகும். இத்துறை **1972**ல் தமிழக அரசால் தொடங்கப்பட்டது. இது தமிழ்நாட்டிற்கு உள்ளேயும், மற்ற மாநிலங்களான கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா போன்ற பகுதிகளுக்கும், தமிழ்நாட்டிலிருந்து பேருந்துகளை இயக்குகிறது.

**போக்குவரத்து சேவைகள் :**

- ✓ தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் நகர் மற்றும் புறநகர் பேருந்து சேவைகளை வழங்குகிறது. மாநகர போக்குவரத்துக் கழகம், சென்னை முழுவதும் நகர பேருந்துகளாகவும், அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் முழுவதும் புறநகர் சேவைகளையும் கொண்டுள்ளது. மற்ற போக்குவரத்துக் கழகங்கள் இருசேவைகளிலும் கணிசமான அளவிற்கு பேருந்துகளை இயக்குகின்றன.

**நிர்வாக அமைப்பு :**

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் எட்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு உள்ளது. அவை :

- ✓ மாநகரப் போக்குவரத்துக் கழகம், சென்னை.
- ✓ தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி.

- ✓ தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், மதுரை.
- ✓ தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கும்பகோணம்.
- ✓ தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம்.
- ✓ தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர்.
- ✓ தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம்.

**தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் :**

- ✓ தமிழக அரசால் மாவட்டங்களின் தலைநகரங்களை இணைக்க 1975ம் ஆண்டு அதிவிரைவுப் பேருந்துப் போக்குவரத்தினைத் தொடங்குவதற்காக முடிவு செய்யப்பட்டது. செப்டம்பர் 15ந்து, 1975ம் ஆண்டு சென்னையிலிருந்து இந்த சேவை ஆரம்பிக்கப்பட்டது.

- ✓ அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் **(State Express Transport Corporation - SETC)** தமிழக அரசால் இயக்கப்படும் அதிதூர பேருந்து சேவைத்துறை ஆகும். இது முன்பு திருவள்ளுவர் போக்குவரத்துக்கழகம் என அழைக்கப்பட்டது. சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் இத்துறை 300கிமீ-க்கு அதிகமான தூரம் உள்ள வழித்தடங்களில் இந்த துறையின் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஒருசில பேருந்துகள் குளிர்சாதன பேருந்துகளாகவும், மீதமுள்ள பேருந்துகள் அனைத்தும் அதிநவீன சொகுசுப் பேருந்துகளாகவும் இருக்கின்றன.

**மாநகரப் போக்குவரத்துக் கழகம், சென்னை :**

மாநகரப் போக்குவரத்துக் கழகம் - சென்னையானது **(Metropolitan Transport Corporation - MTC)** சென்னை நகரில் இயங்கும் நகரப் பேருந்துகளின் துறையாகும். சென்னை மாநகரப் பேருந்துகள் ஒரு நாளைக்கு 42 இலட்சம் பயணிகளுக்கு சேவை புரிகின்றது. சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் மொத்தம் 3,365 பேருந்துகள் இயக்கப்படுகிறது. சென்னை நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் மட்டுமே நகர பேருந்துகள் இயக்கப்படுகிறது. இப்பேருந்துகள் சென்னை நகரின் சுமார் 40 கி.மீ. வரை மக்களுக்கு சேவை புரிகின்றன.

**தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி :**

திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து பகுதிகள் மற்றும் விருதுநகர் மாவட்டத்தின் சில பகுதிகளை உள்ளடக்கிய பணிமனைகளில் இருந்து அனைத்து நகர, புறநகர பகுதிகளுக்கு பேருந்துகள் இயக்கப்படுகிறது.

**தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், மதுரை :**

மதுரை, திண்டுக்கல், தேனி மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து பகுதிகள் மற்றும் விருதுநகர் மாவட்டத்தின் சில பகுதிகளை உள்ளடக்கிய பணிமனைகளிலிருந்து அனைத்து நகர, புறநகர பகுதிகளுக்கு பேருந்துகள் இயக்கப்படுகிறது.

**தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர் :**

கோயம்புத்தூர், ஈரோடு, நீலகிரி, திருப்பூர் மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கிய பணிமனைகளிலிருந்து அனைத்து நகர, புறநகர பகுதிகளுக்கு பேருந்துகள் இயக்கப்படுகிறது.

**தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் :**

சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல் மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கிய பணிமனைகளிலிருந்து அனைத்து நகர, புறநகர பகுதிகளுக்கு பேருந்துகள் இயக்கப்படுகிறது.

**தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் :**

விழுப்புரம், காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர், கடலூர் மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கிய பணிமனைகளிலிருந்து அனைத்து நகர, புறநகர பகுதிகளுக்கு பேருந்துகள் இயக்கப்படுகிறது.

**தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் :**

புதுக்கோட்டை, திருச்சி, நாகப்பட்டிணம், தஞ்சாவூர், இராமநாதபுரம், சிவகங்கை, திருவாரூர், கரூர், பெரம்பலூர் மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து பகுதிகளை உள்ளடக்கிய பணிமனைகளிலிருந்து அனைத்து நகர, புறநகர பகுதிகளுக்கு பேருந்துகள் இயக்கப்படுகிறது.

# சாலை போக்குவரத்து

போக்குவரத்தானது முதலில் குதிரை அல்லது காளையின் மூலம் மனிதர்களால் நடைபெற்றது. பின்னர் நாகரீக வளர்ச்சியின் காரணமாக படிப்படியாக உயர்ந்து, வாகனங்கள் மூலம் நடைபெறுகின்றது. சாலை போக்குவரத்து என்பது பயணிகள் அல்லது பொருட்கள் சாலையில் இடம்பெயர்த்தலைக் குறிக்கின்றது.

**நவீன சாலைகள் :**

நவீன சாலைகள் என்பது பொதுவாக கற்காரை அல்லது கான்கிரீட் மூலம் உருவாக்கப்படுகிறது. கான்கிரீட் சாலை மிகவும் திடமானதாக இருக்கும். எனவே இதனால் அதிகமான சுமைகளை தாங்க முடிகிறது. ஆனால், இந்த வகை சாலைகள் மிகவும் விலையுயர்ந்ததாகவும், கவனமாக தயாரிக்கப்பட்ட துணை அடித்தளமும் தேவைப்படுவதால், முக்கியச் சாலைகள் மட்டுமே கான்கிரீட்டால் கட்டப்படுகின்றன. மேலும் மற்ற சாலைகள் கற்காரை மூலம் அமைக்கப்படுகின்றது.

**சாலைப் போக்குவரத்து :**

தமிழ்நாட்டில் ஏப்ரல் 1946ம் ஆண்டில் மாநில அரசால் தனியாக நெடுஞ்சாலைகள் துறை நிறுவப்பட்டது. இது அக்டோபர் 30 தேதி, 2008ம் ஆண்டு முதல் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை என பெயரிடப்பட்டுள்ளது. இத்துறை தமிழ்நாட்டிலுள்ள தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மற்றும் பிற முதன்மை மாவட்டச் சாலைகளை கட்டமைப்பதற்கும் பராமரிப்பதற்கும் பொறுப்பேற்கிறது.

**சாலைகட்டமைப்பு மற்றும் பராமரிப்புத் துறையில் ஏழு பிரிவுகள் இயங்குகின்றன : அவை**

- தேசிய நெடுஞ்சாலைகள் பிரிவு
- கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு பிரிவு
- நாபார்டு மற்றும் ஊரகச் சாலைகள் பிரிவு
- திட்டப்பணி பிரிவு, மெட்ரோ பிரிவு
- தமிழ்நாடு சாலைத்துறை திட்டப்பணி பிரிவு
- புலனாய்வு மற்றும் வடிவமைப்புப் பிரிவு ஆகியவை ஆகும்.
- இந்தப் பிரிவுகள் மாநிலத்தின் 31 மாவட்டங்களிலும் 120 கோட்டங்களுடனும் 450 உட்கோட்டங்களுடனும் பரவி உள்ளது.

**தேசிய நெடுஞ்சாலைகள் :**

தமிழ்நாட்டில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் அமைக்கப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகளை, மேம்படுத்துவதற்காகவும், பராமரிப்பதற்காகவும் புதுப்பிப்பதற்காகவும் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையில் தேசிய நெடுஞ்சாலைப் பிரிவு 1971ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. தமிழ்நாட்டிலுள்ள 25 தேசிய நெடுஞ்சாலைகளில், 12 நெடுஞ்சாலைகள் தமிழ்நாட்டிற்குள்ளேயே அமைந்திருக்கின்றன.

**தமிழ் நாட்டில் உள்ள 25 தேசிய நெடுஞ்சாலைகள் :**

- ✓ **NH 4, NH 5, NH 7, NH 7A, NH 45, NH 45A, NH 45B, NH 45C, NH 46, NH 47, NH 47B, NH 49, NH 66, NH 67, NH 68, NH 205, NH 207, NH 208, NH 209, NH 210, NH 219, NH 220, NH 226, NH 227, NH 234** போன்றவை தமிழ் நாட்டில் உள்ள 25 தேசிய நெடுஞ்சாலைகளாகும்.

- ✓ இந்தியாவின் தேசிய நெடுஞ்சாலைகள் நடுவண் அரசின் தேசிய நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்படுகிறது. இந்தச் சாலைகளில் பெரும்பாலானவை இரு வழிப்பாதைகள் ஆகும். இந்தியாவிலேயே மிக நீளமான தொலைவைக் கொண்ட தேசிய நெடுஞ்சாலையாக தேசிய நெடுஞ்சாலை எண் 7 (NH7) கருதப்படுகிறது. இதன் நீளம் 2369 கி.மீ., ஆகும். இது இந்தியாவின் வடக்கே உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள வாரணாசியில் ஆரம்பமாகி தெற்கே தமிழ்நாட்டில் உள்ள கன்னியாகுமரியுடன் இணைகிறது. மொத்தச் சாலைக் கட்டமைப்பில் தேசிய நெடுஞ்சாலைகளின் பங்கு 2 சதவீதமாகும். ஆனால் அவை 40 சதவீத போக்குவரத்தை கையாளுகின்றன.

**மாநில நெடுஞ்சாலைகள் :**

- ✓ மாவட்ட தலைநகரங்களையும், முக்கிய நகரங்களையும் இணைப்பதற்காக கட்டமைக்கப்படும் சாலைகளும், மாநிலத்தின் உள்ளூர் அண்டை மாநிலங்களில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளுடன் இணைக்கும் சாலைகளும் மாநில நெடுஞ்சாலைகள் என அழைக்கப்படுகின்றது.

- ✓ கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு பிரிவு, சாலை கட்டமைப்பு, பராமரிப்புப் பணிகளுக்கு பொறுப்பேற்கிறது. இது மட்டுமல்லாமல் இப்பிரிவு முதன்மை மாவட்டச் சாலைகளுக்கும் (MDR), பிற மாவட்டச்

சாலைகளுக்கும் **(ODR)** பொறுப்பேற்கிறது.

- ✓ **SH4, SH6, SH9, SH10, SH22, SH49, SH58, SH68, SH134, SH156** போன்றவை மாநில நெடுஞ்சாலைகள் ஆகும்.

**பிற சாலைகள் :**

இந்த வகைப்பாட்டில் முதன்மை மாவட்டச் சாலைகள், பிற மாவட்டச் சாலைகள் **(ODR)**, ஊரக மற்றும் கரும்புச்சாலைகள், கிழக்குக் கடற்கரைச் சாலை, இராஜீவ் காந்தி சாலை / தகவல் தொழிற்நுட்ப விரைவுச்சாலை, எண்ணூர்-மணலி சாலை மேம்பாட்டுத் திட்டம் **(EMRIP)**, சென்னைத் துறைமுகம் — மதுரவாயல் விரைவுச்சாலை மற்றும் வெளி வட்டச் சாலைத் திட்டம் போன்ற சிறப்புச் சாலைகள் உள்ளடங்கும். இந்தச் சாலைகள் ஒரு மாவட்டத்தினுள் உள்ள தயாரிப்பு மற்றும் சந்தைகளுக்கிடையே தொடர்பை ஏற்படுத்துகிறது. மேலும் மாவட்டத் தலைநகரையும் வட்டத் தலைநகரங்களையும் இணைக்கின்றன. கிழக்குக் கடற்கரைச் சாலை தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தால் **(TNRDC)** கட்டப்பட்ட முதல் சாலை ஆகும். இது **2002**-இல் போக்குவரத்திற்காக திறக்கப்பட்டது.

**சாலை போக்குவரத்து பாதுகாப்பு :**

சாலை போக்குவரத்து பாதுகாப்பு என்பது சாலையைப் பயன்படுத்தும் ஒரு நபர் பலியாவதையோ அல்லது கடுமையாக காயப்படுவதையோ தடுக்கும் முறைகள் மற்றும் நடவடிக்கைகளை குறிப்பதாகும். பாதசாரிகள், மிதிவண்டி ஓட்டுநர்கள், மோட்டார் வாகன ஓட்டுநர்கள் மற்றும் அதன் பயணிகள் ஆகியோர் சாலையின் பயனாளர்கள் ஆவர். தற்கால பாதுகாப்பு உத்திகள் மனிதனால் தவறுகள் நடக்கக்கூடும் என்பதை மனதில் கொண்டு தீவிர காயம் மற்றும் மரணம் தரும் விபத்துக்களை தடுப்பதில் கவனம் செலுத்துகின்றன. இன்றளவில், பாதுகாப்பான சாலை வடிவமைப்பு என்பது மோதல் புள்ளிகளாக (விபத்து நிகழக்கூடிய) கருதப்படும் இடங்களில் வாகன வேகம், விபத்து நடந்தால் பாதிக்கப்படும் சாலை பயனீட்டாளர்கள் கடுமையான காயங்கள் பெறாமலும், உயிரிழப்பு நேராமலும் அமையும்படி குறைவாக இருக்குமாறு உறுதி செய்யும் ஒரு சாலை சூழலை வழங்குவது ஆகும்.

# ஓட்டுநர் உரிமம் பற்றிய தகவல்கள்

**ஓட்டுநர் உரிமம் பெறுவது எப்படி?**

**பழகுநர் உரிமம் :**

- ✓ ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கு முதலில் பழகுநர் உரிமம் (Learner's License Registration) பெற வேண்டும். பழகுநர் உரிமம் பெற்ற நாள் முதல் 30 நாட்களுக்குள் சாலை விதிகளை நன்றாகப் புரிந்துகொண்டு, நெரிசல் மிகுந்த இடங்களிலும் வாகனத்தை நன்றாக ஓட்டிப் பழகி, வாகனத்தை ஓட்ட முடியும் என்ற தன்னம்பிக்கையைப் பழகுநர் பெற வேண்டும்.

- ✓ நீங்கள் வசிக்கும் பகுதிக்குரிய உரிமம் வழங்கும் அலுவலகத்தில் தான் ஓட்டுநர் உரிமத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். டிரைவிங் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெற்றவராக இருப்பின் அவர்கள் டிரைவிங் ஸ்கூல் மூலமாகவே விண்ணப்பிக்கலாம்.

- ✓ படிவம் 4 நேரடியாக விண்ணப்பிப்பவர்களுக்கும், படிவம் 5 டிரைவிங் ஸ்கூல் மூலமாக விண்ணப்பிக்கிறவர்களுக்கும் என்று தனித்தனியாக விண்ணப்பங்கள் உள்ளன.

**தகுதிகள் :**

- ✓ 50 CCக்கு குறைவான திறன் உடைய கியர் இல்லாத மோட்டார் வாகனம் ஓட்டுவதற்கு பழகுநர் உரிமம் பெற வேண்டுமெனில் 16 வயது நிறைவடைந்திருக்க வேண்டும்.

- ✓ கியர் உள்ள மோட்டார் வாகனம் மற்றும் இலகு ரக நான்கு சக்கர வாகனம் ஓட்டுவதற்கு 18 வயது நிறைந்திருக்க வேண்டும்.

- ✓ பொதுவாக போக்குவரத்து வாகனங்களை ஓட்டுவதற்கு 20 வயது முடிந்திருக்க வேண்டும்.

**இணைக்க வேண்டிய படிவங்கள் :**

- படிவம் - **1** - **LLR** விண்ணப்பம்
- படிவம் - **2** - உடல் தகுதிச்சான்று
- படிவம் - **14** - மருத்துவச் சான்று

**முகவரி :**

- முகவரிக்கான ஆதாரமாக கீழே உள்ள ஏதேனும் ஒரு சான்றின் நகலை இணைக்கப்படல் வேண்டும்.
- பிறப்புச்சான்று
- பள்ளிச்சான்று
- பாஸ்போர்ட்
- **LIC** பாலிசி

**பழகுநர் உரிமம் பெற யாரிடம் விண்ணப்பிக்க வேண்டும்?**

வட்டார போக்குவரத்து அலுவலர் அல்லது மோட்டார் வாகன ஆய்வாளர் கிரேடு **I/II** அவர்களிடம் நேரில் சென்று வாகனத்தை ஓட்டிக் காட்ட வேண்டும்.

**விண்ணப்பித்த எத்தனை நாட்களுக்குள் LLR வழங்கப்படும் ?**

வாகனத்தை ஓட்டிக்காட்டி தேர்ச்சி பெற்ற நாளன்றே **LLR** (ஓட்டுநர் உரிமம்) சான்றிதழ் வழங்கப்படும்.

**ஓட்டுநர் உரிமம் :**

- ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கு **LLR** சான்று பெற்று **30** நாட்கள் முடிந்தவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.
- ஓட்டுநர் உரிமம் பெற விண்ணப்பப் படிவம்-**4** உடன் வாகனத்தின்

பதிவுச்சான்று (RC Book), இன்சூரன்ஸ் சான்று, சாலை வரிச்சான்று, மாசுகட்டுப்பாடு சான்று ஆகியவற்றை இணைக்க வேண்டும். போக்குவரத்து வாகனமாக இருந்தால் வாகன தகுதிச்சான்று இணைக்கப்பட வேண்டும். சொந்த வாகனம் இல்லையென்றால் வாகன உரிமையாளரின் அனுமதிச்சான்று, மற்றும் 3 பாஸ்போர்ட் அளவுள்ள புகைப்படம் ஆகியவற்றை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

❖ போக்குவரத்து வாகனங்களுக்கு சேவைகட்டணமாக ரூ.50 மட்டும் செலுத்த வேண்டும். ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கு கட்டணமாக ரூ.250 செலுத்த வேண்டும். இதுவே ஒரு பைக் மற்றும் காருக்கு சேர்த்து எடுத்தால் 250 + 250 = ரூ.500 மற்றும் இதனுடன் சேவைக்கட்டணமாக ரூ.100-ம் கூடுதலாக செலுத்த வேண்டும்.

**ஒருவர் எத்தனை ஆண்டுகள் வரை வாகனம் ஓட்ட அனுமதி?**

வாகனம் ஓட்டுவது ஓட்டுபவரின் உடல் ஆரோக்கியத்தைப் பொருத்தது. எனவே ஒருவரது வயது, உடல் நிலையைப் பொருத்து அவருக்கு குறிப்பிட்ட ஆண்டுகள் வரை மட்டுமே வாகனம் ஓட்ட அனுமதிக்கப்படும்.

**புதிய முகவரியை ஓட்டுநர் உரிமத்தில் பதிவு செய்யும் முறை :**

✓ பழைய ஓட்டுநர் உரிமத்தில் இருக்கும் முகவரியில் மாற்றம் இருப்பின், அதற்குரிய ஆதாரத்துடன் விண்ணப்பித்து புதிய முகவரியுடன் கூடிய ஓட்டுநர் உரிமத்தை வாங்கிக்கொள்ள வேண்டும். புதிய முகவரியை பதிவு செய்ய புதிய முகவரியுடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டை, பாஸ்போர்ட், எல்.ஐ.சி. பாலிசி, வீட்டு வரி ரசீது போன்றவற்றை ஆதாரமாக அளிக்கலாம்.

✓ மேலே குறிப்பிட்ட ஆவணங்கள் எதுவும் உங்களிடம் இல்லை என்றால் குடும்ப அட்டை, வீட்டு வரி ரசீது, தொலைப்பேசி கட்டண ரசீது போன்றவற்றில் ஏதாவது ஒன்றை ஒரு அனுமதி பெற்ற பத்திரத்துறை பதிவாளரிடம் சான்றாக அளித்து, அவரிடமிருந்து புதிய முகவரிக்கான வாக்குமூலம் வாங்கியும் இணைக்கலாம். உள்ளூர் முகவரியாக இருந்தாலும் வேறு பகுதியாக இருந்தாலும் இரண்டிற்கும் ஒரே நடைமுறை தான் பின்பற்றப்படுகிறது.

**பிற மாநிலங்களுக்கு சென்றால் அங்கும் புதிய ஓட்டுநர் உரிமம் வாங்க வேண்டுமா?**

- ✓ புதிய ஓட்டுநர் உரிமம் வாங்க வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் முகவரி மாற்றத்திற்குரிய நடைமுறையையே கடைபிடித்தால் போதுமானது. ஆனால், இருக்கின்ற மாநிலத்திலிருந்து புறப்படுவதற்கு முன்பாக, சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அதிகாரியை அணுகி, தடையில்லா சான்றிதழ் வாங்க வேண்டும்.

- ✓ இடம்பெயர்ந்து செல்கின்ற மாநிலத்தில் நீங்கள் புதிதாக வசிக்கும் புதிய வசிப்பிடத்திற்குரிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் என்.ஓ.சி.யுடன் விண்ணப்பித்தால், அவர்கள், சம்பந்தப்பட்ட மாநில அரசுக்குக் கடிதம் எழுதி, ஓட்டுநர் உரிமம் குறித்த தகவல்கள் அனைத்தும் உண்மையான தகவல்களா? என்று உறுதி செய்த பின் புதிய உரிமம் வழங்குவார்கள்.

## மாற்றுத் திறனாளிகளுக்கு ஓட்டுநர் உரிமம்

- மாற்றுத் திறனாளிகளுக்கு ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கு முதலில் அவர்களின் உடல் சார்ந்த பிரச்சினைக்கு ஏற்ப எளிதில் இயக்கும்படியாக வாகனம் வடிவமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

- நடக்க இயலாதவர்கள் ஓட்டும் இரு சக்கர வாகனங்களில் அவர்கள் இயக்குவதற்கு ஏற்றவாறு கூடுதல் சக்கரங்கள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

- காது கேளாமை மற்றும் வாய் பேச இயலாத மாற்றுத் திறனாளிகள் வாகனத்தில் டேஷ் போர்டு சிக்னல் காண்பிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

- ஏனெனில் அவர்களால் பின்னால் வரும் வாகனங்களின் ஒலியைக் கேட்க இயலாது என்பதால் அவர்களுடைய வாகனத்தில் கட்டாயம் டேஷ் போர்டு சிக்னல் காண்பிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருத்தல் அவசியம்.

- அந்த வாகனம், சம்பந்தப்பட்ட மாற்றுத் திறனாளி பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தால் மட்டுமே மாற்றுத் திறனாளிகள் வாகன ஓட்டுநர் உரிமம் பெற முடியும்.

# ஓட்டுநர் உரிமம் தொலைந்து விட்டால்?

- ஓட்டுநர் உரிமம் தொலைந்து விட்டால், ஓட்டுநர் உரிமத்தை தொலைத்த நபர் முதலில் காவல் நிலையத்திற்கு சென்று உடனடியாகப் புகார் அளிக்க வேண்டும்.

- காவல் அதிகாரி புகார் படிவத்தின் ஒரு பகுதியை ஓட்டுநர் உரிமத்தை தொலைத்த நபரிடம் வழங்குவார்.

- காவல் நிலையத்தில் கொடுக்கப்படும் புகார் படிவ நகலின் ஒவ்வொரு பக்கத்திற்கும் ரூ. 25 வசூலிக்கப்படும்.

- வாக்குமூலம் எழுதப்பட்ட புகார் படிவத்தின் நகலை காவல் அதிகாரியிடம் இருந்து தவறாமல் பெற்றுக்கொள்ள வேண்டும்.

- ஓட்டுநர் உரிமம் கிடைக்காத பட்சத்தில் காவல் அதிகாரி வழங்கும் **Non - traceable** சான்றிதழுடன் ஓட்டுநர் உரிமம் எண் மற்றும் முகவரி, பிறந்த தேதிக்கான சான்றிதழ்களை இணைத்து, உரிய கட்டணம் செலுத்தி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

- விண்ணப்படிவ வேண்டுகோளுக்கு சான்றளிப்பதற்கு முன் மோட்டார் வாகன துறையின் அலுவலர், ஓட்டுநர் உரிமத்தை தொலைத்த நபர் அளித்த விண்ணப்பத்தை காவல் அதிகாரி சரிபார்ப்பார்.

- ஓட்டுநர் உரிமத்தை தொலைத்த நபர் மோட்டார் வாகன துறையிலிருந்து ஓட்டுநர் உரிமத்தை பெற்றுக் கொள்ளலாம்.

# ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தல்

### ஓட்டுநர் உரிமத்தைப் புதுப்பிக்க யார் விண்ணப்பிக்க முடியும்?

- காலாவதியான ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பவர் மட்டுமே ஓட்டுநர் உரிமத்தை புதுப்பிக்க விண்ணப்பிக்க முடியும்.

- ஓட்டுநர் உரிமத்தைப் புதுப்பிக்க எவ்வகையான ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்?

- விண்ணப்பம் - படிவம் - 9
- படிவம் -1A - விண்ணப்பதாரர் 50 வயதுக்கு மேல் இருத்தால் மட்டும் இணைக்க வேண்டும்.
- எம்.சி.சி. உள்ள மருத்துவ சான்றிதழ்
- ஓட்டுநர் உரிமம்
- வயதை நிரூபிக்கும் ஆதாரம்
- பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள் - 2

**ஓட்டுநர் உரிமத்தைப் புதுப்பிக்க செலுத்த வேண்டிய கட்டணம் :**

புத்தக படிவத்திற்கு ரூ.25 கட்டணம் செலுத்த வேண்டும். லேமினேட் அட்டை ரூ.100 + சேவை கட்டணங்கள் ரூ.50 செலுத்த வேண்டும். தாமதமாக புதுப்பிப்பவர்களுக்கு ஒரு ஆண்டுக்கோ அல்லது ஒரு பகுதிக்கோ கூடுதல் கட்டணமாக ரூ.50 வசூலிக்கப்படும்.

**ஓட்டுநர் உரிமத்தைப் புதுப்பிக்க விண்ணப்பிக்கும் முறைகள் :**

- வட்டார போக்குவரத்து அலுவலர் அல்லது மோட்டார் வாகன ஆய்வாளர் கிரேடு I அவர்களிடம் விண்ணப்பங்களைக் கொடுக்க வேண்டும். விண்ணப்பதாரர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சென்று விண்ணப்பிக்க வேண்டும்.
- ஓட்டுநர் உரிமம் புதுப்பிக்கப்படவேண்டிய நாட்களை கடந்து ஐந்து வருடங்களுக்கு மேல் புதுப்பிக்கப்படாமல் இருந்தால் மீண்டும் புதிதாக ஓட்டுநர் சோதனை நடத்தப்பட்டு ஓட்டுநர் உரிமம் புதுப்பிக்கப்படும். ஓட்டுநர் உரிமத்தில் ஓட்டுநர் உரிமம் புதுப்பிக்கப்படவேண்டிய தேதி குறிப்பிடப்பட்டிருக்கும்.
- ஓட்டுநர் உரிமத்தை புதுப்பிக்காமல் வாகனத்தை ஓட்டிச்சென்று விபத்து ஏற்பட நேர்ந்தால் சட்டப்படி எடுக்கப்படும் நடவடிக்கைகள்:
- ஓட்டுநர் உரிமத்தின் கடைசி தேதி முடிந்து 30 நாட்கள் வரை உரிமம் செல்லுபடியாகும். அதற்குப் பின்னர், உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டினால் நீதிமன்றம் என்ன நடவடிக்கை எடுக்கிறதோ, அதே